©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 2.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 13] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 13, 2011
பங்குனி 30, திருவள்ளுவர் ஆண்டு–2042

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

2011–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன்மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:–

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2011**

**1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.**

இம்மாநிலச் சட்டப்பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கிறார்:–

**1.** (1) இந்த அவசரச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்த அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 29/1974. **2.** 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 14–A எனும் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 14–B எனும் புதிய பிரிவை புகுத்துதல்.

"14–B ஒரு சில தனியார் பள்ளிகளுக்கு மானியம் வழங்குதல்.–(1) 14–A எனும் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசானது 2011–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1–ஆம் நாளன்றும் அது முதற்கொண்டும்,–

(*a*) **1991—1992—**ஆம் கல்வி ஆண்டு தொடங்கிய தேதியிலிருந்து தொடங்கி **1998—1999—**ஆம் கல்வி ஆண்டின் கடைசி தேதியில் முடிவடைகிற கால அளவின்போது அமைத்துருவாக்கப்பட்ட தனியார் பள்ளி எதற்கும்;

(*b*) **1991—1992—**ஆம் கல்வி ஆண்டு தொடங்கிய தேதியன்று இருந்த, அரசின் மானியம் எதுவும் வழங்கப்பட்டிராத தனியார் பள்ளி எதற்கும்;

(*c*) **1991—1992—**ஆம் கல்வி ஆண்டு தொடங்கிய தேதியன்று இருந்த, அரசின் மானியம் எதுவும் வழங்கப்பட்டிராத தனியார் பள்ளி ஒன்றில் கற்பிக்கப்படுகிற வகுப்பு அல்லது படிப்பு பிரிவு எதற்கும்; மற்றும்

(*d*) **1991—1992—**ஆம் கல்வி ஆண்டு தொடங்கிய தேதியிலிருந்து தொடங்கி **1998—1999—**ஆம் கல்வி ஆண்டின் கடைசி தேதியில் முடிவடைகிற கால அளவின்போது தனியார் பள்ளி ஒன்றில் தொடங்கப்பட்ட, கற்பிப்பதற்கான வகுப்பு அல்லது படிப்பு பிரிவு எதற்கும்,

வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்காகவும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அத்தகைய வீதத்தில் மானியத்தை வழங்கலாம்.

(2) அரசானது,—

(i) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்பாணைகளின் வகைமுறைகள் எந்த அளவுக்கு அத்தகைய தனியார் பள்ளிக்குப் பொருந்துகின்றனவோ அந்த அளவுக்கு அத்தகைய வகைமுறைகள் விதிகள் அல்லது பணிப்பாணைகள் எவற்றுக்கும் இணங்கிய வகையில் நடக்காத; அல்லது

(ii) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் அத்தகைய தனியார் பள்ளியில் பணியமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர் அல்லது பிற நபர் எவருக்கும் செலுத்தத்தக்க சம்பளம் மற்றும் படிகள் அத்தகைய ஆசிரியர் அல்லது பிற நபருக்கு செலுத்தப்படாத நிலையில் உள்ள; அல்லது

(iii) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனை எதனையும் மீறுகிற அல்லது அத்தகைய நிபந்தனை எதற்கும் இணங்கி நடக்கத் தவறுகிற,

தனியார் பள்ளி எதனையும் பொறுத்த அளவில் **(1)—**ஆம் பிரிவில் சுட்டப்பட்ட மானியம் முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதனையுமோ நிரந்தரமாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட கால அளவு எதற்குமோ நிறுத்தி வைக்கலாம்.

**3.** (2)—ஆம் உட்பிரிவின்படியான மானியத்தை நிறுத்தி வைப்பதற்கு முன்னர், அரசானது கல்வி முகவாண்மைக்குத் தனது முறையீடுகளைச் செய்து கொள்வதற்கு வாய்ப்பு ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

**விளக்கம்.—**இந்த பிரிவின் நோக்கத்திற்காக, தனியார் பள்ளி என்பது சிறுபான்மையினர் பள்ளி ஒன்றை உள்ளடக்கும்.".

2011—ஆம் ஆண்டு,
பிப்ரவரித் திங்கள் 27—ஆம் நாள்.

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

## விளக்கவுரை

அரசானது, 1998—ஆம் ஆண்டில், 1991—1992—ஆம் கல்வி ஆண்டு தொடங்கியதற்குப் பின்னர், புதிதாக அமைத்துருவாக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் ஏற்கெனவே இருந்து வருகின்ற தனியார் பள்ளிகள் எவற்றிலும் தொடங்கப்பட்ட, கற்பிப்பதற்கான புதிய வகுப்பிற்கும் படிப்புப் பிரிவிற்கும் மானியம் வழங்குதல் கூடாது எனக் கொள்கை முடிவு ஒன்றை எடுத்தது. அதற்கிணங்கிய வகையில் 1973—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 29/1974), மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காகத் திருத்தப்பட்டது.

2. தற்போது, 1991—1992—ஆம் கல்வி ஆண்டிற்கு பின்னர் அமைத்துருவாக்கப்பட்ட புதிய பள்ளிகளுக்கும், தொடங்கப்பட்ட கற்பிப்பதற்கான புதிய வகுப்பிற்கும் படிப்புப் பிரிவுக்கும் மானியம் வழங்குமாறு கோரும் வேண்டுகோள் அடங்கிய முறையீடுகள் பல்வேறு கல்வி நிறுவனங்களிடமிருந்து சிறுபான்மையினர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. அரசானது, அத்தகைய முறையீடுகளைப் பரிசீலனை செய்ததற்குப் பின்னர் 1998—1999ஆம் கல்வி ஆண்டு வரையில் அமைத்துருவாக்கப்பட்ட அத்தகைய தனியார் பள்ளிகளுக்கும் அதுவரையில் தொடங்கப்பட்ட, கற்பிப்பதற்கான வகுப்புகளுக்கும் படிப்புப் பிரிவுகளுக்கும் மானியம் வழங்குவதென கொள்கை முடிவு ஒன்றினை எடுத்தது. அரசின் மேற்சொன்ன கொள்கைக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்குவதெனக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் 29/1974 எனும் மேற்சொன்ன எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தில் தக்க வகைமுறையொன்றைச் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு சட்டப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2011–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்டம் எண் 3/2011**

**1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976. **2.** 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவில் "முப்பத்து நான்கு ஆண்டுகள் எட்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "முப்பத்து ஐந்து ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.